[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜூலை 20

கட்டடங்களில் இயங்கிவரும் 46 விடுதிகளில், 14 விடுதிகளுக்கு மாநில அரசின் நிதியிலிருந்து 38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் மாண்புமிகு அம்மாவின் அரசால் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. 2019—2020 ஆம் ஆண்டில் 2 பிற்படுத்தப்பட்டோர் விடுதிகள், 2 மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் விடுதிகள் மற்றும் 2 சிறுபான்மையினர் விடுதிகள் என மொத்தம் 6 கல்லூரி விடுதிகள், 2 கோடியே 56 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாகத் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. பொதுப் பணித் துறை, கூட்டுறவுத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, செய்தி மற்றும் விளம்பரத் துறை, தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோகத் திட்டத்தில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு முத்தாய்ப்பான 4 அறிவிப்புகளை இங்கே அறிவித்து அவர்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்றி இருக்கின்ற உக்கர எதிர்ப்பையெல்லாம் ஒற்றைச் சிரிப்பாலேயே ஓடவிட்டு, வெற்றி ஒன்றையே குறியாகக்கொண்டு ஐயங்கள் கிளப்பியோரெல்லாம் வெட்கித் தலைகுனிய அம்மாவின் பிள்ளைகள் நாங்கள் என மார்தட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணன் தம்பிகளாய் இருந்து அசத்திக்காட்டிவரும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் ஈ.பி.எஸ். அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

2019 ஜூலை 20]

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் அம்மாவினுடைய அரசை சிறப்பாக வழிநடத்தி, அம்மா தந்த திட்டங்கள் மட்டுமல்ல, மக்களுக்குத் தேவையான திட்டங்களைத் தந்து கொண்டிருக்கக்கூடியவர், குடிமராமத்துத் திட்டம் தந்து விவசாயிகளின் வயிற்றில் பாலை வார்த்த குடிமராமத்து நாயகன், இன்றைக்கு உள்ளாட்சி அமைப்புகளில் இருக்கக்கூடிய நீர்நிலைகளையெல்லாம் தூர்வாருவதற்கு நிதி ஒதுக்கித் தந்ததற்கு உள்ளாட்சித் துறையின் சார்பாகவும், மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடவுள் எனும் முதலாளி, கண்டெடுத்த தொழிலாளி, விவசாயி. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தானும் ஒரு விவசாயி என்பதனால் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு பல திட்டங்களைக் கொண்டு வந்தார்கள்.*

மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதிகளில் மக்களின் கோரிக்கைகளை முன்வைத்து, கால்நடை கிளை நிலையம், மருந்தகம், கால்நடை மருத்துவமனை போன்றவைகள் வேண்டும் என வேண்டுகோள் வைத்தார்கள். அதற்கிணங்க, கால்நடை பராமரிப்புத் துறைக்கு விதி 110—ன்கீழ் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ரூ.11.40 கோடி செலவில் அறிவிப்புகளை வெளியிட்டதற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் நலனைப் பேணும் வகையிலும், சுற்றுச்சூழலை மேம்படுத்தி பொது மக்களையும் விவசாயிகளையும் காக்கும் விதமாக விதி 110—ன்கீழ் நீர்வளப் பாதுகாப்பு இயக்கத்தினை அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர், விவசாயிகளின் காவலன் அண்ணன் அவர்களுக்கு*

எனது சார்பாகவும் தமிழக விவசாயிகளின் சார்பாகவும் எனது மனமார்ந்த நன்றியை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த பெருந்தலைவர்கள், தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக பாடுபட்டு தம் வாழ்வையே அர்ப்பணித்த தமிழ் சான்றோர்கள் மற்றும் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று பல தியாகங்கள் செய்து தங்கள் இன்னுயிரையும் நீத்த தியாகச் செம்மல்கள் மற்றும் சமுதாய வளர்ச்சிக்கு வித்திட்ட பெருந்தலைவர்களைப் போற்றும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே பல்வேறு மாவட்டங்களில் சிலைகளையும், மணிமண்டபங்களையும், நினைவுத் தூண்களையும் அமைத்து, அன்னார்களுடைய பிறந்த நாட்களை அரசு விழாவாகக் கொண்டாட வழிவகுத்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் இன்றைக்கு அம்மா அவர்களின் வழியிலே பல்வேறு தலைவர்களுக்கு நினைவு மண்டபங்களையும், சிலைகளையும், திருவுருவச் சிலைகளையும் அமைத்து, அவர்களது பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடி பெருமை சேர்த்து வருகின்றார்கள். அந்த வகையிலே, இன்று தமிழ் சினிமா உலகம் 100 ஆண்டுகளைத் தாண்டி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்ற நேரத்திலே, தமிழ் சினிமா துறையின் முதல் நட்சத்திர அந்தஸ்து பெற்ற கதாநாயகன் M.K.T. என்று போற்றப்பட்ட திரு. M.K. தியாகராஜ பாகவதருக்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலே, திருவுருவச் சிலையுடன்கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டமைக்கு என்னுடைய சார்பிலும் ஒட்டுமொத்தத் திரைத் துறையின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தை வென்று நிற்கும் காவியத் தலைவர் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர்*

2019 ஜூலை 20] [திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி]

M.G.R. அவர்களை இதய சிம்மாசனத்தில் நிறுத்தியவனாய், தொண்டர்களின் நாளத்திலும், இதயத்தின் ஆழத்திலும் என்றும் நின்று ஆட்சி புரியும் எங்கள் ஆருயிர் அம்மா அவர்களை நினைத்தவனாய் உரையை ஆரம்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நேசிக்கும் முதல்வர், மக்கள் நேசிக்கும் தவத்தாயின் புதல்வர், சிக்கல் வந்தாலும் சிரித்தபடி வரவேற்கும் தமிழ்நாட்டின் சிங்கம், கொங்குநாட்டின் தங்கம் எங்கள் அண்ணன் எடப்பாடியாரின் சிந்தனை உயர்வானது. (மேசையைத் தட்டும் ஒலி) இலட்சியம் தெளிவானது. மக்கள் தேவைகளை உணர்ந்து இவர் செய்கின்ற சேவை செம்மைமிக்கது. எங்கள் தானைத் தலைவர் எடப்பாடியார் பிறப்பித்திருக்கும் அரசாணையை எண்ணி இன்று நான் தேனில் விழுந்தவன்போல் மகிழ்ச்சியில் திளைக்கின்றேன். ஆம், தமிழ் சினிமாவின் முதல் Super Star–க்கு மணிமண்டபம் கட்ட எடுத்துள்ள முடிவு வரவேற்கத்தக்கது. யார் இந்த முதல் Super Star? அழகுக் குரலால் தமிழ் உலகை ஆண்டவர், புகழை ஈன்றவர், தங்கம், வைரம் போன்றவர், தமிழ் கலைஞர்களின் ஆண்டவர், ஆம் அவர்தான் M.K.T. என்றழைக்கப்பட்ட திரு. தியாகராஜ பாகவதர். (மேசையைத் தட்டும் ஒலி) எளிமையான குடும்பத்தில் பிறந்து, தன்னுடைய கந்தர்வ கானக் குரலால் தமிழகத்தைக் கட்டிப்போட்ட இசையுலகின் பொக்கிஷம் அவர். 1934-ல் பவளக்கொடி படத்தில் நடிகராக அறிமுகமானார் தியாகராஜ பாகவதர். அவரது 'ஹரிதாஸ்' திரைப்படம் 3 தீபாவளிகளைக் கடந்து ஓடியதே அவருடைய புகழுக்கு சாட்சி.

வெள்ளித் திரைவானிலே பேரொளி வீசி விண்மீனாகத் திகழ்ந்து, தனது தேன் மதுரக் குரலால் இலட்சக்கணக்கான தமிழ் மக்களை இசை இன்பத்திலே மெய் மறந்து இருக்கச் செய்தவர்; மயில் கண் சரிகை வேட்டி, சில்க் சட்டை, ஜவ்வாது மணம், பளபளக்கும் சரீரத்துடன் அனைவரையும் வியக்க வைக்கும் சாரீரத்தையும் பெற்றிருந்த, எம்.கே. தியாகராஜ பாகவதர் சாதனையின் கதாநாயகன்; நாடகத் துறையின்மூலம் திரைத் துறையில் நுழைந்து தன் கந்தர்வ கானத்தால், மக்கள் மனதை வென்று, ஏழிசை மன்னர் என்ற பட்டம் பெற்றவர் பாகவதர் அவர்கள். காலம் அவரது சிந்தனையை, அவரது நினைவைச் சிதைத்தாலும், அவரது புகழைச் சிதைக்க முடியவில்லை. அவரைப்போல் திரையுலகில் புகழின் உச்சத்தைத் தொட்டவர்கள் எவரும் இல்லை. இத்தகைய பெருமைமிக்க Super Star–களின் Super Star, தமிழ்த் திரையுலகின் முதல் Super Star, தியாகராஜ பாகவதர்

அவர்களுக்கு பேரவை விதி 110—ன்கீழ் வெண்கலச் சிலையுடன்கூடிய மணிமண்டபம் அமைக்க ஆணை பிறப்பித்திருக்கும் சிறுபான்மையின மக்களின் பாதுகாவலர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது வணக்கத்தையும், நன்றியையும், எனது சார்பிலும், தமிழ்நாட்டில் வாழும் அனைத்து விஸ்வகர்மா மக்கள் சார்பிலும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்த்த பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர், புரட்சித் தலைவி ஆகியோர் வரிசையில் இன்று ரூ.22.84 கோடி மதிப்பில் 6 முத்தான அறிவிப்புகளை, அதாவது, தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை,* Robert Caldwell *அவர்களுக்காக ஆய்வறிக்கை, பிற மாநிலத் தமிழ் பல்கலைக்கழகங்களில் பேராசிரியர் பணியிடம் தோற்றுவித்தல், திருக்குறளை, இதுவரை வெளிவராத இந்திய மற்றும் உலக மொழிகளில் மொழியாக்கம் செய்தல் மற்றும்* RUSA *திட்டத்தின் மூலமாக ரூ.20 கோடி மதிப்பில் தமிழ்ப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட அறிவிப்புகளை அறிவித்த அன்பு அண்ணன் முதல்வர் எடப்பாடியார் அவர்களுடைய பெயர், தமிழ் வளர்த்த சான்றோர்களின் வரிசையில் வரலாற்றில் நீங்காத இடம் பெறும் என்று கூறி, இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி என் முதல் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பினரின் கல்வி, சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்த, மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் மகத்தான ஆட்சி புரிகின்ற தன்னலமில்லா தவமாய், தமிழ்க் கலையின்*

2019 ஜூலை 20] [திருமதி சி. வளர்மதி]

வடிவாய் வாழ்ந்த தாயின் வழியில், மாற்றாரும் போற்றுகின்ற மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அண்ணன் அவர்கள் பேரவை விதி 110—ன்கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைக்கு முத்தான 5 திட்டங்களை அறிவித்துள்ளார்கள். மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களுக்கு துறையின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

4. தகவல் கோரல்

(அ) பொதுப் பணித் துறையில் NMR பணியாளர்களை பணி நிரந்தரம் செய்தல்

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டத் தொடரின் கடைசி நாளான இன்று, நான் கேள்வி கேட்கவில்லையென்றால், நன்றாக இருக்காது, இல்லையா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைய அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள். ஆனால், நான் அவற்றில் எதிர்பார்த்தது என்னவென்றால், அவர்களுடைய துறையில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக இருக்கிற NMR—கள், பாவம், அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பணி நிரந்தரம் செய்யப்படும் என்ற முத்தான ஓர் அறிவிப்பை அறிவித்திருந்தால், நாங்களும் அந்தச் செய்தியைக் கேட்டு மகிழ்ச்சியடைந்திருப்போம். மாண்புமிகு அமைச்சர்களைப்போல் நானும் பாராட்டியிருப்பேன். இப்பொழுது ஒன்றும் கெட்டுப்போய் விடவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுந்து வேகமாக 'அறிவிக்கப்படும்' என்று அறிவித்தால், மறுபடியும் மகிழ்ச்சியடைவேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலுரையிலேயே*